

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை அவரது பிறந்தநாளில், சென்னை ‘குறிஞ்சி இல்லத்தில்’ உதகை – படுகர் இன மக்கள் ஏராளமானோர் சந்தித்து, வாழ்த்துத் தெரிவித்தார்கள். அப்போது படுகர் இன மக்கள், உதயநிதி ஸ்டாலின் அவர்களை, தங்களது தலைப்பாகை உள்ளிட்ட பாரம்பரிய உடையினை அணிந்துகொள்ளச் செய்து மகிழ்ந்த காட்சி.

### அமைச்சர் - முனைவர் கோவி.செழியன் நேரில் வழங்கினார்!

# மறைமலை அடிகளாரின் பேத்திக்கு புதிய வீடு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, நவ.29–

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி தமிழறிஞர் மறைமலை அடிகளாரின் மகன்வழி பேத்தி திருமதி.லலிதா அவர்களுக்கு தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் அய்யனார் கோயிலில் புதிய வீட்டினை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் வல்லம் அய்யனார் கோயில் பேஸ்–1 திட்டத்தின்படி ரூ.8,23,000/– மதிப்பிலான K–5 எண்ணுள்ள வீட்டை கட்டணம் ஏதுமின்றி தமிழறிஞர் மறைமலை அடிகளாரின் மகன்வழி பேத்தி திருமதி. லலிதா அவர்களுக்கு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி. செழியன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் எம்.அரவிந்த், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

இதுகுறித்து அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்த போது,

நேற்றைய தினம் மாவட்ட ஆட்சியரிடம் வீடு வழங்க கோரி கொடுத்த மனுவின்பேரில் மணிக்கணக்கில் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு முதலமைச்சர் அவர்கள் வீடு வழங்க உத்தரவிட்டதின்பேரில், தமிழுக்காக தொண்டாற்றிய மறைமலை அடிகளாரின் மகன்வழி பேத்தி திருமதி.லலிதா அவர்களுக்கு இன்று வீடு வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

வீடு வழங்கப்பெற்ற திருமதி. லலிதா தெரிவித்தபோது மறைமலை அடிகளாரின் பேத்தியாகிய எனக்கு எனது குடும்ப நிலை அறிந்து உடனடியாக வீடு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர். மு.பாலகணேஷ், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி. ஆர்.உஷா புண்ணியமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### பழைய மாமல்லபுரத்தில் – சாலை விபத்தில்

# உயிரிழந்த 5 பெண்களின் குடும்பத்திற்கு தலா ரூ.2 லட்சம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

*சென்னை, நவ. 29 -*

*செங்கல்பட்டு மாவட்டம், பையனூர் கிராமம், பழைய மாமல்லபுரம் சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை அளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.*

*இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-*

*செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், பழைய மாமல்லபுரம் சாலை, பையனூர் மதுரா பண்டிதமேடு சந்திப்பில் நேற்று முன்தினம் (27.11.2024) பிற்பகல் 02.20 மணியளவில் திருப்போரூர் வட்டம், பையனூர் கிராமம், பாளையத்தம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த திருமதி. ஆந்தாயி (வயது 71) க/பெ.முத்தன், திருமதி.லோகம்மாள் (வயது 56) க/பெ.சின்ராஜ், திருமதி.யசோதா (வயது 54) க/பெ.கோவிந்தசாமி, திருமதி. விஜயா (வயது 53) க/பெ.சாமிநாதன் மற்றும் திருமதி.கௌரி (வயது 52) க/பெ.குப்பன் ஆகிய 5 பெண்கள் சாலையோரத்தில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தபோது திருப்போரூரிலிருந்து மாமல்லபுரம் நோக்கி சென்று கொண்டிருந்த TN11 J 7270 என்ற பதிவெண் கொண்ட கார் ஒன்று எதிர்பாராத விதமாக மோதிய விபத்தில் மேற்குறிப்பிட்ட 5 பெண்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியை அறிந்து மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.*

*மேலும், இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.*

*இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.*

### பயனடைந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

# தொழிலாளர் நலனுக்கான ஒன்றிய அரசின் திட்டங்கள் என்ன?

### மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, நவ. 29 –

ஒன்றிய அரசின் தொழிலாளர் நலனுக்காக மத்திய திட்டங்களில் செலவு மற்றும் பயனீட்டாளர் விவரம் குறித்து ஒன்றிய அரசிடம் வேலூர் மக்களவைத் தொகுதி எம்.பி. டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து அவரது கேள்விகள் வருமாறு :–

கடந்த ஐந்தாண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் தமிழ்நாடு உட்பட தொழிலாளர் நலனுக்காக ஒன்றிய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய நிதியுதவி திட்டங்கள் மற்றும் மத்தியத் துறைத் திட்டங்களின் விவரங்கள் யாவை?

ஒதுக்கப்பட்ட, அனுமதிக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் மற்றும் கடந்த ஐந்து வருடங்கள் மற்றும் நடப்பு காலத்தில் மேற்கண்ட ஒவ்வொரு திட்டத்திற்கும் ஆண்டு வாரியாக, திட்ட வாரியாக மற்றும் மாவட்ட வாரியாக விவரம் தருக.

மேற்கூறிய காலக்கட்டத்தில் தமிழ்நாடு உட்பட மேற்கண்ட திட்டங்களின் மூலம் பயனடைந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

தொழிலாளர்களுக்கான இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தும்போது எதிர்கொள்ளும் சவால்களை ஒன்றிய அரசாங்கம் ஆய்வு செய்து ஆவணப்படுத்தியிருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள்;

நாட்டில் உள்ள தொழிலாளர்களின் நிலையை மேம்படுத்த மாநில அரசுகளுக்கு போதுமான நிதி உதவியை வழங்க ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் எழுப்பிய கேள்விகளுக்கு ஒன்றிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புக்கான ராஜாங்க அமைச்சர் ஷோபா கரண்ட்லாஜே எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு :–

ஒன்றிய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் திட்டங்கள் மத்தியத் துறை திட்டங்களாகும். செயல்படுத்தப்படும்



முக்கிய நலத்திட்டங்கள்

(i) பீடி / சினிமா / நிலக்கரி அல்லாத சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் நலனுக்கான தொழிலாளர் நலத்திட்டம் (LWS) மூன்று கூறுகளை உள்ளடக்கியதாகும். சுகாதாரம், உதவித்தொகை மற்றும் வீட்டுவசதி;

(ii) ஆத்மநிர்பர் பாரத் ரோஜ்கர் யோஜனா (ABRY) கோவிட் – 19 தொற்றுநோய்களின் போது புதிய வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் வேலை இழப்பை மீட்டெடுப்பதற்கும் முதலாளிகளை ஊக்குவிக்கிறது;

(iii) மாதிரி தொழில் மையங்களை (MCCs) நிறுவுவதற்கான தேசிய தொழில் சேவை (NCS)

(iv) ஊழியர்களின் ஓய்வூதியத் திட்டம் (EPS), 1995 EPFO மூலம் செயல்படுத்தப்பட்டது.

(v) பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மான்தன் (PMSYM), முதியோர் ஓய்வூதியத்திற்காக இந்திய அரசாங்கத்தின் பங்களிப்புடன் ஒத்துப்போகும் தன்னார்வ பங்களிப்புத் திட்டம்;

(vi) கொத்தடிமைத் தொழிலாளர்களை அடையாளம் கண்டு புனர்வாழ்வளிக்க கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்வு;

(vii) பணியாளர்கள் மாநில காப்பீட்டு கழகம் மூலம் சுகாதார சேவைகள்.

தமிழ்நாடு அரசு உட்பட முக்கிய நலத்திட்டங்களின் கீழ் செலவின விவரங்கள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

மாநில அரசுகள் மூலம் விழிப்புணர்வு மற்றும் பயனாளிகளை அணிதிரட்டுதல் போன்ற திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள சவால்கள், மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் ஆதரவுடன், விழிப்புணர்வு முகாம்களை ஏற்பாடு செய்தல், சேர்க்கையை எளிதாக்குதல் போன்றவற்றின் மூலம் தீர்க்கப்படுகின்றன.

1. பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மந்தன் (PM–SYM) ஓய்வூதியத் திட்டம்

2020–21ல்– ரூ. 319.71 கோடிகள்
2021–22ல்–ரூ. 324.23 கோடிகள்
2022–23ல்–ரூ. 269.91 கோடிகள்
2023–24ல்– ரூ. 162.51 கோடிகள்
2024–25
(20.11.2024 அன்று வரை)
ரூ. 95.18 செலவு செய்யப்பட்டது.

20.11.2024 நிலவரப்படி, தமிழ்நாடு மாநிலத்தில் 68.641 பயனாளிகள் உட்பட PMSYM திட்டத்தின் கீழ் 50 லட்சத்திற்கும் அதிகமான பயனாளிகள் மாந்தன் போர்ட்டலில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

2. தொழிலாளர் நலத்திட்டம் (LWS):

2019–20 – ரூ. 53.66 கோடி
2020–21 – ரூ. 86.25 கோடி
2021–22 – ரூ. 64.21 கோடி
2022–23 – ரூ. 80.79 கோடி
2023–24 – ரூ. 81.31 கோடி

3. கடந்த ஐந்தாண்டுகளில் மொத்தப் பயனாளிகள் 96,08,540, இவர்களில் தமிழகப் பகுதியிலிருந்து மட்டும் 15 இலட்சத்து 22 ஆயிரத்து 782 பயனாளிகள் உள்ளனர்.

தேசிய தொழில் சேவை (NCS):

2019–20 – ரூ.63.93 கோடி
2020–21 – ரூ. 43.80 கோடி
2021–22 – ரூ. 24.30 கோடி
2022–23 – ரூ. 43.99 கோடி
2023–24 – ரூ. 46.90 கோடி
2024–25 – ரூ. 24.25 கோடி
(15.11.2024 அன்று வரை)
செலவு செய்யப்பட்டது

மேற்கண்ட நிதியாண்டுகளில் (நவம்பர் 15, 2024 வரை) NCS இன் கீழ் வேலை தேடுபவர்கள் / பயனாளிகள் 3,70,18,111, அவர்களில் 13,83,407 பேர் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ளனர்.

ஆத்மநிர்பர் பாரத் ரோஜ்கர் யோஜனா (ABRY):

2020–21 – ரூ.351.08 கோடி
2021–22 – ரூ. 4046.44 கோடி
2022–23 –ரூ. 4593.08 கோடி
2023–24 – ரூ. 1197.89 கோடி
வழங்கப்பட்டது

31.3.2024 நிலவரப்படி, மொத்த பயனாளிகள் 60.49 லட்சம், அவர்களில் 8.05 லட்சம் பயனாளிகள் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ளனர்.

6. கொத்தடிமைத் தொழிலாளர் திட்டத்தின் மறுவாழ்வு:

பணியாளர்கள் மாநில காப்பீட்டுக் கழகம் (ESIC): ESIC திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மாநிலத்தில், 11 மருத்துவமனைகள் (3 ESIC மற்றும் 8 ESIS) உள்ளன மற்றும் 241 மருந்தகங்கள் மற்றும் 7 புதிய மருத்துவமனைகளுக்கு கொள்கை ரீதியான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மொத்தம் 43,77,090 காப்பீட்டு நபர்கள் உள்ளனர்.

இந்தத் திட்டமானது, மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் இருந்து முன்மொழிவுகளைப் பெற்றவுடன், அவர்களுக்கு நிதி அளிக்கப்படும் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டது. பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் மறுவாழ்வுக்காக விடுவிக்கப்பட்ட தொகை விவரங்கள்

சமீப ஆண்டுகளில் தமிழ்நாடு மாநிலத்தில் பின்வருமாறு : –

கொத்தடிமைத் தொழிலாளியின் எண்

தமிழ் நாடு மாநிலத்தில் புனர்வாழ்வளிக்கப்பட்டவர்

2021–22 – ரூ. 1016
2022–23 – ரூ. 29
2023–24 – ரூ.176
2024–25 – ரூ. 03
விடுவிக்கப்பட்ட தொகை

பிணைக்கப்பட்டவர்களின் மறுவாழ்வு தொழிலாளி (ரூ. லட்சங்களில்).

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் விளக்கமளித்தார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசின் திட்டங்கள் மூலம்

# கரூர் மாவட்ட பொருளாதாரம் ரூ.50 ஆயிரம் கோடியாக உயர்த்தப்படும்!

### அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேச்சு!

*கரூர், நவ. 29-*

*கரூர் மாவட்டத்திற்கு திராவிட மாடல் அரசு ரூ.3000 கோடி மதிப்பிலான வளர்ச்சி திட்டங்களை வழங்கியுள்ளது. கரூர் பொருளாதாரத்தை ரூ. 50 ஆயிரம் கோடியாக உயர்த்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரசு தேவையான அனைத்து திட்டங்களையும் வழங்கும் என அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேசினார்.*

*கரூர் மாவட்டத்தில் 73 சங்கங்களைச் சேர்ந்த தொழில் முனைவோர் ஒன்றிணைந்து உருவாக்கிய ‘கரூர் விஷன் 2030’ என்ற கூட்டமைப்பு வரும் 2030ம் ஆண்டுக்குள் கரூரில் பொருளாதார வளர்ச்சியை ரூ.50,000 கோடி அளவுக்கு இலக்கு வைத்து நிறைவேற்ற திட்ட மிடப்பட்டுள்ளது. இதனையொட்டி கரூர் விஷன் 2030 திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்திய தொழில் கூட்டமைப்பு (சிஐஐ) கரூர் கிளை மற்றும் யங் இண்டியன்ஸ் (ஒய்ஐ) கரூர்திருவள்ளுவர் மைதானத்தில் மாரத்தான் மற்றும் வாக்கத்தான் போட்டிகள் நடைபெற்றன. சிஐஐ கரூர் கிளை தலைவர் பாலசுப்பிரமணியன், யங் இண்டியன்ஸ் தலைவர் கார்த்திகேயன் வரவேற்க, மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, தேசியக் கொடி மற்றும் ஒலிம்பிக் கொடியை ஏற்றி வைத்து ஒலிம்பிக் ஜோதியை பெற்றுக்கொண்டார். “கரூர் விஷன் 2030 என்ற திட்டம் மூலம் கரூர் பொருளாதாரத்தை ரூ.50,000 கோடியாக உயர்த்துவோம். அதற்கு தேவையான திட்டங்களை முதல்வர் மற்றும் துணை முதல்வர் நமக்கு வழங்குவார்கள்” என்றார். கரூர் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல், எஸ்.பி ஃபெரோஸ் கான் அப்துல்லா, கிருஷ்ணராயபுரம் எம்எல்ஏ க. சிவகாம சுந்தரி, மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன், மாநகராட்சி ஆணையர் சுதா, மற்றும் தொழிலதிபர்கள் கலந்து கொண்டனர்.*

*கரூர் அட்லஸ் கலையரங்கில் தொழில் முனைவோருடன் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.*

*இதில் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி பேசியதாவது:-*

*தி.மு.கழக ஆட்சி அமைந்த பிறகு கரூர் மாவட்டத்திற்கு வேளாண்மை கல்லூரி, அரவக்குறிச்சி கடவூரில் அரசு கலைக் கல்லூரி உள்ளிட்ட ரூ. 3000 கோடி ரூபாய் அளவிற்கு வளர்ச்சித் திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கியுள்ளார். மேலும் பல்வேறு திட்டங்கள் இடம் தேர்வு செய்வதில் தொய்வு ஏற்பட்டது. அதனை வேகப்படுத்தும் பணிகள் கலெக்டர் தலைமையில் துறை அதிகாரிகள் மூலம் விரைவுபடுத்தப்பட்டுள்ளது.*

*அடுத்து மாவட்டத்தின் தொழில் வளர்ச்சி கட்டமைப்புகள் எப்படி உருவாக்கப்பட வேண்டும் என அந்தந்த துறை அதிகாரிகளிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று செயல் வடிவம் பெற துவங்கியுள்ளன. 200 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டது. பொங்கலுக்குள் நில ஆர்ஜிதம் செய்யும் பணி முடிவடையும். அரவக்குறிச்சி அருகே முருங்கை பூங்கா, கரூர் டிரேட் சென்டர், சிறிய ஜவுளி பூங்கா, விமான நிலையம், அமைக்கப்பட உள்ளது. தற்போது ஏற்றுமதியாளர்கள் இரண்டு மணி நேரம் காரில் பயணம் செய்து வந்து செல்ல வேண்டி உள்ளதால் விமான நிலையம் அமைக்கப்பட வேண்டும். தனியாரிடமிருந்து இடத்தை பெற வேண்டி இருப்பதால் அவர்களுடைய உரிமையையும் பார்க்க வேண்டியது உள்ளது. கரூர் மாநகராட்சி ஆனதால் வரி உயர்த்தப்பட்டுள்ளது. அதை குறைக்க வேண்டும் எனக்கு கோரிக்கை வைத்தனர். வரி குறைக்கப்படும்.*

*கரூர் காமராஜ் மார்க்கெட் ஏற்கனவே இருந்த வியாபாரிகளுக்கு முன்னுரிமை அளித்து பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது. அமராவதி ஆறு ஆண்டுக்கு ஒரு முறை தூர்வாரப்படும். தாதம்பாளையம் ஏரி வனத்துறை வசம் இருப்பதால் மாற்று இடம் ஒதுக்கி பொதுப் பணித்துறை வசம் எடுத்து பணிகள் மேற்கொள்ளப்படும். கரூர் மாவட்ட விளையாட்டு அரங்கில் நீச்சல் குளம் அமைக்கப்படும்.*

*கரூர் புறநகர் பேருந்து நிலையம் தொடர்பான வழக்கு விரைவில் முடிந்து நல்ல தீர்ப்பு வரும் என எதிர்பார்க்கிறோம். 40% பணிகள் நடைபெற்ற நிலையில் காழ்ப்புணர்ச்சியோடு கோர்ட்டுக்கு போய் உள்ளனர். அதே போல் போட்டித் தேர்வு மாணவர்களின் வசதிக்காக ரூ.6.75 கோடி மதிப்பீட்டில் பிரமாண்ட நூலகம் கரூரில் அமைக்கப்படுகிறது. இதற்கும் சிக்கல் ஏற்படுத்தினார்கள். பிரச்சனை தீர்க்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. கரூர் பழைய காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மகளிர் தங்கும் விடுதி அமைக்க டெண்டர் தயாரிக்கப்பட்டு வருகிறது. கரூர் மாவட்டத்தில் முதன்முறையாக பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதி அமைய இருக்கிறது. வெங்கமேடு மீன் மார்க்கெட் பணி விரைவில் முடிவடையும்.*

*டைட்டல் பார்க் அமைக்க இடம் தேர்வு செய்யும் பணி நடைபெறுகிறது. சிப்காட் வளாகத்தில் தொழிலாளர்கள் தங்கும் விடுதி மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை இங்கே கூறினார்கள். அனைத்தையும் நிறைவேற்ற நான் பாடுபடுவேன். வாக்களித்த மக்களுக்கு வளர்ச்சி திட்ட பணிகளை நிறைவேற்றுவது எனது கடமை.*

*ரூ. 40 கோடி மதிப்பீட்டில் குளித்தலை மருத்துவமனையை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி பணிகள் நடைபெற்று வருகிறது. தடுப்பணைகள் கட்டப்படும் நெரூர் உண்ணியூர் பாலம் 100 கோடி மதிப்பீட்டில் பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.*

*இந்தப் பாலம் சென்னை செல்வோருக்கு ஏதுவாக அமையும். மேட் இன் இந்தியா போல மேட் இன் கரூர் என்ற நிலை உருவாக வேண்டும். மாவட்ட வளர்ச்சிக்கு தேவையான அனைத்து தேவைகளையும் அரசிடம் இருந்து பெற்று தர வேண்டியது எனது கடமை பொறுப்பு என உறுதி அளிக்கிறேன். தொடக்க பயணம் வெற்றிகரமாக அமைந்துள்ளது எனவே நிறைவான வெற்றியை பெறுவோம். நீங்கள் செய்ய நினைப்பதை உடனிருந்து செய்வேன். கூட்டு முயற்சியால் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்றார்.*



புதுடெல்லியில் 26.11.2024 அன்று நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பிரகடனம் சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025 விழாவில், இந்திய அளவில் சிறந்த வங்கி சேவைக்கான விருதினை தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிகளுக்கு ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்சா அவர்கள் வழங்க, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வின் போது கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். ந.சுப்பையன், தமிழ்நாடு தலைமை கூட்டுறவு வங்கி,கூடுதல் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் லோகநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.



திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் நகர தி.மு.க. சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஆம்பூர் மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தங்க மோதிரம் அணிவித்தார். நிகழ்ச்சியில் ஆம்பூர் நகரச் செயலாளர் எம்.ஆர்.ஆறுமுகம், ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், ஆம்பூர் நகர மன்றத் தலைவர் ஏஜாஸ் அகமது, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் சந்தீப்ராஜ், நகர இளைஞரணி அமைப்பாளர் சரண்ராஜ், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் மோகன், வசந்தராஜ், கார்த்திக் மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.